12.02.2026.
O.S.No. 78/2024

வா. சா. 1 சரவணன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1, 3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

என் தாத்தாவின் சொத்தில் பாகம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன். தாவாச்சொத்துக்கள் 5.5.1952ம் வருடம் எனது தாத்தா நல்லுத்தேவருக்கு கிரையப்படி பாத்தியம் என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 46 செண்ட் என்றால் சரிதான். நல்லுத்தேவர் மனைவி பெயர் பேச்சியம்மாள். இருவருக்கும் கருப்பத்தேவர், சின்னச்சாமி என்ற இரண்டு ஆண்மக்களும், பொன்னம்மாள், ராமுத்தாய், லட்சுமி ஆகிய 3 பெண்மக்களும் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி லட்சுமி 1977ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். லட்சுமிக்கு முத்துலட்சுமி, தங்கம் என்ற இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான். என் தாத்தா நல்லுத்தேவர் 1985ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நல்லுத்தேவரின் பெண்வாரிசுகள் ராமுத்தாய், பொன்னம்மாள் மற்றும் லட்சுமியின் வாரிசுகள் முத்துலட்சுமி தங்கம் ஆகிய நான்கு பேர்களும் சேர்ந்து 7.10.1987ம் தேதி தாவாச்சொத்தில் தங்களுக்குரிய பாகத்தை பொறுத்து கருப்பத்தேவர், சின்னச்சாமி, தாயாரான பேச்சியம்மாள் ஆகிய மூவருக்கும் வாதசாஆ.2 விடுதலை பத்திரத்தை எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி விடுதலை பத்திரத்தின்படி கருப்பத்தேவர், சின்னச்சாமி, தாயாரான பேச்சியம்மாள் ஆகிய மூவருக்கும் தாவாச்சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பேச்சியம்மாள் கடந்த 19.08.1994ம் தேதி அவருக்குரிய 1/3 பாகத்தை பொறுத்து அவரது பெண்களாகிய ராமுத்தாய், பொன்னம்மாள் மற்றும்

பேத்தி முத்துலட்சுமி ஆகிய மூவருக்கும் தான செட்டில்மெண்ட்(வாதசாஆ.3) எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

வழக்குரைஞரின் வேண்டுகோளின்பேரில் மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்வதற்காகஒத்தி வைக்கப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.12 17:21:20 +0530

Principal District Judge,
Dindigul.